செ.வெ.எண்: 352 நாள்: 02.06.2020

**தஞ்சாவூர் மாவட்டத்தில் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்திட 70 சதவீத மானியம்.**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்புகள் அமைப்பதற்கு விவசாயிகளுக்கு 70 சதவீத அரசு மானியம் வழங்கிட அரசு தீர்மானித்துள்ளது.

பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான எரிசக்தி பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் (PM-KUSUM) வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாய பயன்பாட்டிற்கான திறந்தவெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார் பம்புசெட்டுகள் 468 எண்கள் அமைத்திட நடப்பு 2020-21-ம் நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு 5 குதிரை திறன் (HP), 7.5 குதிரை திறன் (HP) மற்றும் 10 குதிரை திறன் (HP) கொண்ட சோலார் பம்பு செட்டுகள் அமைத்து தரப்படும். மொத்த செலவு தொகையில் 70 சதவீதம் அரசு மானியமாகவும், மீதமுள்ள 30 சதவீதம் விவசாயிகள் தங்களது பங்குத் தொகையாக செலுத்தப்பட வேண்டும்.

ஏற்கனவே, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் இலவச மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ள விவசாயிகள் அவர்களுடைய மூதுரிமையை துறக்க வேண்டிய அவசியம் இல்லை. தங்களுக்குரிய இலவச மின் இணைப்பு முறை வரும் பொழுது சூரிய சக்தியில் இயங்கும் பம்புசெட்டுகளை மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கான சம்மத கடிதத்தினை சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தில் வழங்க வேண்டும். இதுவரை இலவச மின் இணைப்பு வேண்டி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் விண்ணப்பிக்காத விவசாயிகள் புதியதாக பதிய வேண்டிய அவசியம் இல்லை. சூரிய சக்தியால் இயங்கும் மோட்டர் பம்பு செட்டுகளை அமைத்திட விண்ணப்பிக்கும் போது நுண்ணீர் பாசன அமைப்புடன் இணைத்திட உறுதிமொழி அளித்திட வேண்டும்.

சூரிய சக்தியால் இயங்கும் மோட்டர் பம்பு செட்டுகளை அமைத்திட தஞ்சாவூர் கோட்டத்தை சார்ந்த விவசாயிகள் திரு.க.குமணன், உதவி செயற்பொறியாளர் (வே.பொ) அவர்களை 63834 26912 என்ற எண்ணிலும், கும்பகோணம் கோட்டத்தை சார்ந்த விவசாயிகள் திரு.லெ.அய்யப்பன், உதவி செயற்பொறியாளர் (வே.பொ), கும்பகோணம் அவர்களை 94425 71176 என்ற எண்ணிலும், பட்டுக்கோட்டை கோட்டத்தை சார்ந்த விவாசயிகள் திரு.சி.எழிலன், உதவி செயற்பொறியாளர் (வே.பொ), பட்டுக்கோட்டை அவர்களை 94436 78621 என்ற எண்ணிலும், மேலும் கூடுதல் விவரங்களுக்கு திரு.H.N.கான், செயற்பொறியாளர் (வே.பொ) அவர்களை 94433 98633 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.